கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் (கனடா)
KOKUVIL HINDU COLLEGE
OLD STUDENTS ASSOCIATION (CANADA)
2020

# 15 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்
# பண்ணிசைப் போட்டி

**பின்வரும் தேவாரங்களில் ஒன்றினைத்தெரிவு செய்து பண்ணுடன் பாடுக.**

01. அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

02. மருவார் கொண்றை மதிசூடி
மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடை மேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

03. மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.